தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**7 வயதுப்பிரிவு**
(01.01.2009 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

# எங்கள் தாய்மொழி

தாய்ப் பாலில் கலந்த மொழி. செம்மொழிச் சிறப்புடன் தன்னிலை மாறாத ஆதிமொழி. உணர்வின் ஊற்றாகி தமிழராய் எம்மைத் தலைநிமிர வைக்கும் எங்கள் தாய்மொழி. வையகம் போற்ற வாழ்கின்ற தமிழ்மொழி.

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் ஆய்தமும் உரிமையாய் கொண்டது. தொகையும் பாட்டுமாய் சங்கத்தில் செழித்தது. பாவலர் நாவிலே தவழ்ந்து விளையாடியது. காலத்தின் ஓட்டத்தில் கரையின்றி நிலைபெறக் கணினித் தமிழாய் அகிலத்தில் நிலைத்தது.

ஆழ வேரோடி, எல்லைகள் கடந்து, பழமை மாறாது, புதுமை பல ஏற்றுப் புலத்திலும் வலம் வருவது. கண்டங்கள் எங்கும் பரந்து வாழ்கின்ற தமிழ் இனத்தின் உறவுப் பாலமாய் பெரும் பணி ஆற்றும் அன்னைமொழி. புண்பட்ட போதெல்லாம் பண்பட வைத்த இனிமையான மொழி.

இடையறாத பேச்சுவழக்கும் இலக்கண வளமும் எண்ணற்ற நூல்களும் எம் தாய்மொழிக்கு அணி செய்கின்றன. “முத்தமிழ்” எங்கள் தாய்மொழியின் தனிப்பெருமை. தாய்மொழியைக் கற்றுத் தெளிவதும் கண்ணாக மதிப்பதும் மானத்தமிழினத்தின் முதற்கடமை.

தமிழர் தலைநிமிர, தமிழ்மொழி அரசாள, தமிழீழம் தனை அமைக்கத் தலைப்பட்டவர் தலைவர் மாமா. அவரின் வழிகாட்டலை ஏற்று, விடுதலைக்குத் தங்கள் உயிர் தந்த மாவீரர் நினைவோடு எங்கள் தாய்மொழியை விருப்புடன் கற்போம். வையகத்தமிழர் அனைவரும் தாய்மொழியால் ஒன்றிணைவோம்.

நன்றி

வணக்கம்.